**07**

# முயற்சியாண்மைக்கல்வி

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டை

## தரம் 10

# வணிக எண்ணங்களும் வாய்ப்புக்களும்

1. சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வாக தனிநபர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் வணிக பெறுமானமுடைய சிந்தனைகள் அறியப்படுவது,
   1) வுணிக வாய்ப்புக்களாக
   2) வணிக எண்ணங்களாக
   3) வணிக சிந்தனைகளாக
   4) வணிக பகுப்பாய்வாக

2. A ஒரு வணிக எண்ணங்கள் பொதுவானவை

   B முயற்சியாளரின் வணிக எண்ணங்களை வணிக வாய்ப்புக்கயாக மாற்றுவது முயற்சியாளரின் கடமையாகும்.

   மேற்கண்ட கூற்றின் அடிப்படையில்,
   1) A உண்மை , B உண்மை
   2) A பொய், B உண்மை
   3) A உண்மை , B பொய்
   4) A பொய், B பொய்,

3. ஒரு வணிக எண்ணங்கள் தோன்றும் மூலங்களாக கருத முடியாதது,
   1) தொழில்நுட்ப மாற்றங்கள்
   2) சந்தை ஆய்வுகள்
   3) பொழுதுபோக்கு மற்றும் விருப்பம்
   4) ஊடகங்கள்

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

4. நல்ல வணிக வாய்ப்பொன்றில் காணப்படும் பண்பாக கருதப்படாதது,

   1) தேவையான வளங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருத்தல்
   2) கேள்வி காணப்படல்
   3) போட்டித் தன்மை காணப்படாமை
   4) சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படுதல்

5. ஒரு வணிக எண்ணமாக கருதப்படுவது,
வணிக எண்ணம் என்பது நபர்களின் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யும் வணிக மதிப்பைக் கொண்ட ஒரு எண்ணமாகும். அதன்படி, ஒரு நல்ல வணிக எண்ணத்தின் பண்பாக கருதப்படாதது,

   1) ஒரு வணிகமாக அபிவிருத்தி செய்ய முடிதல்
   2) இடரைக் குறைக்கும் திறன்
   3) வுணிகமாக மாற்றும் மற்றும் வருமானம் உழகைக்கும் திறன்
   4) வியாபாரத்தில் ஏற்படும் தேவைகளை பூர்த்தி செய்ய முடியுமாக அமைதல்

6. இடர்களை பொறுப்பேற்கும் நபருக்கு போதுமான வருமானத்தை பெற்றுத் தரும் முதலீட்டு எண்ணம்,

   1) வணிக நோக்கம்
   2) வணிக வாய்ப்பு
   3) வணிக எண்ணமாகும்
   4) வணிக குறிக்கோளாகும்

7. பொருத்தமான வணிக வாய்ப்பைத் தேர்ந்தெடுக்கும் செயல்முறையின் வரிசையை சரியாகக் காட்டும் விடை

   1) முழுப்பகுப்பாய்வு, சூட்சுமமான பகுப்பாய்வு, SWOT பகுப்பாய்வு
   2) SWOT பகுப்பாய்வு, சூட்சுமமான பகுப்பாய்வு, முழுப்பகுப்பாய்வு,
   3) சூட்சுமமான பகுப்பாய்வு, முழுப்பகுப்பாய்வு, SWOT பகுப்பாய்வு
   4) முழுப்பகுப்பாய்வு, SWOT பகுப்பாய்வு, சூட்சுமமான பகுப்பாய்வு

8. வணிக எண்ண மதிப்பீட்டு தாள் பயன்படுத்தப்படுவது?

   1) சூட்சுமமான பகுப்பாய்வில்
   2) முழுப்பகுப்பாய்வில்

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

3) SWOT பகுப்பாய்வில்

4) மேலே உள்ள எல்லாவற்றிலும்

9. வணிக எண்ணங்கள் வணிக வாய்ப்பிற்கு இடையில் உள்ள வேறுபாடு,
   1) வணிக யோசனைகள் பொதுவானவை அல்ல, வணிக வாய்ப்புகள் பொதுவானவை.
   2) எல்லா வணிக எண்ணங்களையும் பிரயோக ரீதியாக நடைமுறைப்படுத்த முடியாது மற்றும் ஒரு வணிக வாய்ப்பை செயல்படுத்த முடியும்.
   3) வணிக எண்ணங்கள் பகிரங்கமானவை மற்றும் வணிக வாய்ப்புகளை வெளிப்படையாகக் கண்டறிய முடியாது.
   4) வணிக எண்ணங்கள் நிறைய உருவாக்குகின்றன, வணிக வாய்ப்புகள் அவ்வாறு உருவாவது இல்லை.

10. சூட்சுமமான பகுப்பாய்விற்குப் பயன்படுத்தக்கூடிய எடுகோல்களாக கருதப்படாதது,

    1) சந்தையில் காணப்படுதல் மற்றும் தேவையான மூலதனத்தை பெறக்கூடிய வசதி
    2) சட்ட ஒழுங்குகள் மற்றும் போட்டியின் தன்மை காணப்படல்.
    3) கேள்வி மற்றும் வளங்கள் நெகிழ்வுத் தன்மை
    4) முயற்சியாளரின் திறன் மற்றும் ஆர்வம்

11. SWOT பகுப்பாய்வின் வெளிப்புறச் சூழலில் காணப்படக்கூடிய ஒரு வாய்ப்பு
    1) போட்டியாளர்கள் விலகுதல்
    2) வளங்கள் காணப்படல்
    3) திறமையான ஊழியர்களைக் கொண்டிருத்தல்.
    4) நிதி நிலைத்தன்மை.

12. SWOT பகுப்பாய்வு தொடர்பான அட்டவணை கீழே உள்ளது..

| A | B |
|---|---|
| 1. பலம் | A. அரச ஊக்குவிப்புக்கள் |
| 2. பலவீனங்கள் | B. பொருளாதார வீழ்ச்சி |
| 3. வாய்ப்புக்கள் | C. திறமையான ஊழியர்களைக் கொண்டிருத்தல் |
| 4. அச்சுறுத்தல்கள் | D. நிதிப் பற்றாக்குறை |

நிரல் A உடன் B நிரலை இணைக்கும் போது கிடைக்கும் சரியான பதில்

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

1) 1C ,2B ,3A, 4D
2) 1A, 2B, 3C, 4D
3) 1C, 2D, 3A,4B
4) 1D, 2B,3A, 4C

13. ஒரு வணிகத்தில் நிதி ஸ்திரத்தன்மை மற்றும் தேவையான வளங்கள் காணப்படுதல் என்பன
1) வாய்ப்பாகும்
2) பலமாகும்
3) அச்சுறுத்தலாகும்
4) பலவீனமாகும்

14. ஆக்க உரிமை செல்லுபடியாகும் காலம்
1) 10 ஆண்டுகள்
2) 15 ஆண்டுகள்
3) 20 ஆண்டுகள்
4) 25 ஆண்டுகள்

15. ஒரு முயற்சியாளரின் புதிய கண்டுபிடிப்புக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆக்க உரிமைப் பத்திரம்,
1) வருமானமாகும்
2) செலவாகும்.
3) பொறுப்பாகும்
4) சொத்தாகும்

**(2) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

1. வுணிக எண்ணங்கள் என்பதனால் கருதப்படுவது யாது?
2. ஒரு நல்ல வணிக எண்ணத்தின் பண்புகள் 2 தருக.
3. வணிக எண்ணங்கள் தோன்றக்கூடிய 2 மூலங்களைக் குறிப்பிடுக.
4. சிறந்த வணிக வாய்ப்பின் 2 பண்புகளை எழுதுக.
5. வணிக எண்ணங்கள் மூலம் வணிக வாய்ப்பை தேர்ந்தெடுக்கும் செயன்முறையை சுருக்கமாக விபரிக்க.
6. சூட்சுமமான பகுப்பாய்விற்குப் பயன்படுத்தக்கூடிய 4 நியதிகளை எழுதுக.

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

7. புதிய கண்டுபிடிப்பு என்றால் என்ன?
8. நீங்கள் விரும்பும் வணிகம் தொடர்பாக,
   (1) பலங்கள்
   (2) பலவீனங்கள்
   (3) வாய்ப்புக்கள்
   (4) அச்சுறுத்தல்கள் 2 வீதம் தருக.
9. ஆக்க உரிமை பற்றி சுருக்கமாக விளக்குக.
10. ஒரு ஆக்க உரிமை செல்லுபடியாகும் காலம் எவ்வளவு?
11. வணிக எண்ணங்கள் மற்றும் வணிக வாய்ப்புக்களுக்கு இடையேயுள்ள 2 வேறுபாடுகளைத் தருக.

COMMERCE & BUSINESS STUD